



# ஸ்ரீ சேஷ ஒளி

திருவருட்சுடர்



நிர்வாக ஆசிரியர் : குருஜி கே.வி.எல்.என். சர்மா

ஒளி - 13 காலாண்டிதழ் அக்டோபர் - டிசம்பர் 2019 கதிர் - 4



# "சிறகடித்து பறப்போம் சித்தர்களோடு திளைப்போம்"



பறவைக்கு சிறகில் பலம். மனிதனுக்கு மனதில் பலம். சிறகொடிந்தால் பறவையால் பறக்க முடியாது. தத்தளிக்கும் மனித மனம் ஒடிந்து போனால் நொந்து போனாலும் வாழ்க்கை தத்தளிக்கும். பலம் பொருந்திய மனதுதான் வெற்றிக்கு அடித்தளம். இக்காலத்தில் சித்தர்கள் என்று சொல்லிக்கொண்டு போலி வேஷம் தரித்து சத்குரு என்று சொல்லிக்கொண்டு தலைபாகைகளையும் ஆபரணங்களையும் தரித்துகொண்டு மக்களை ஏமாற்றி **நானே கடவுள்** என்று கூறும் நிலையை மாய தோற்றத்தை உருவாக்கி மக்களை வசீகரிக்கும் அற்ப மனிதர்களை நாம் பார்க்கிறோம். இது கலியுகத்தின் கொடுமை, காலத்தின் கட்டாயம். புண்ணிய பூமியான பாரத தேசத்திற்கு ஏற்பட்டிருக்கும் சாபக் கேடு. ராமர் கண்ட ராஜ்யமோ அல்லது கிருஷ்ணன் கண்ட கீதையுமோ இருந்தும் பாதை மாறியதால் வந்த கொடூர விளைவுதான் இது. சிறகடித்து பறக்கவேண்டிய வயதில் சின்னஞ்சிறு பிஞ்சுகள் முதல் நடுத்தர வயதானவர்கள் வரை மாய மனிதர்கள் வீசும் போலி வலையில் சிக்கி தவித்துக் கொண்டிருக் கிறார்கள். இதுபோன்ற நிலை மாற வேண்டும். மனிதன் மனிதனாக வாழ்ந்து வானுறையும் தெய்வத்தோடு இணைந்து ஐக்கியமாக வேண்டும் என்பதுதான் வாழ்க்கையின் தத்துவமாக, குறிக்கோளாக, சங்கல்பமாக நமக்கு இருக்கவேண்டும். திசைமாறிய பறவைகள் போல் இல்லாமல் கண்டம் விட்டு கண்டம் தாண்டினாலும் நிரந்தர இருப்பிடத்திற்கு செல்லும் ஞான பறவைகளாக நாம் திகழவேண்டும். அந்த நிலை வரவேண்டும் என்றால் போலிகளின் பிடியில் நாம் சிக்காமல் உண்மை சித்தனிடம் சரணடைய வேண்டும். அப்பொழுது திசை தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கும் மனதிற்கு திசை காட்டும் கருவி போல் உண்மை சித்தன் வழிகாட்டுவான். உண்மை சித்தர்களின் அரவணைப்பில் இருக்கின்ற காரணத்தினால் தான், மாடம்பாக்கத்தில் அடியேனால் சித்தர்கள் அனைவருக்கும் ஆலயம் அமைக்க முடிந்தது. நடந்தது நடந்து போகட்டும். கடந்தது கடந்து போகட்டும். இனியாவது நாம் விழித்துக் கொள்வோம். மாடம்பாக்கத்தில் உண்மை சித்தர்களை தரிசனம் செய்து உடல் பொருள் ஆவியை ஒன்று திரட்டி உண்மை சித்தனோடு ஐக்கியமாகி வாசியோக சாதகம்செய்து சாதகப் பறவைகளாக சிறக்கடித்து பறப்போம் வாருங்கள்! வாருங்கள்! வாருங்கள் உண்மையே வெல்லும் சத்தியமே ஜெயிக்கும். இது உறுதி.

**கீழே எந்த எந்த நட்சத்திரகாரர்கள் எந்தந்த சித்தர்களை வழிபடலாம் என்பதை கொடுத்துள்ளோம்** வழிபடுவோம்! பயன் அடைவோம்.

ஆசிகள்

குருஜி கே.வி.எல்.என். சர்மா

## சித்தர்களும் வழிபடும் நட்சத்திரங்களும்

| கிரகம் | சித்தர்கள் | நட்சத்திரம் |
|---|---|---|
| சூரியன் | ஸ்ரீ பட்டினத்தார் சித்தர் | கார்த்திகை, உத்திரம் |
| | ஸ்ரீ கடுவெளி சித்தர் | உத்திராடம் |
| சந்திரன் | ஸ்ரீ சிவவாக்கிய சித்தர் | ஹஸ்தம், ரோகிணி |
| | ஸ்ரீ கயிலாய சித்தர் | திருவோணம் |
| அங்காரகன் | ஸ்ரீ மகா போகர் | மிருகசீரிஷம், சித்திரை |
| | ஸ்ரீ புலிப்பாணி சித்தர் | அவிட்டம் |
| புதன் | ஸ்ரீ வள்ளலார் சித்தர் | ஆயில்யம், கேட்டை |
| | ஸ்ரீ இடைக்காடர் சித்தர் | ரேவதி |
| குரு | ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர் | புனர்பூசம், விசாகம் |
| | ஸ்ரீ அகப்பேய் சித்தர் | பூரட்டாதி |
| சுக்ரன் | ஸ்ரீ கஞ்சமலை சித்தர் | பரணி, பூரம் |
| | ஸ்ரீ சென்னிமலை சித்தர் | பூராடம் |
| சனி | ஸ்ரீ கபிலர் சித்தர் | பூசம், அனுஷம் |
| | ஸ்ரீ கருவூரார் சித்தர் | உத்திரட்டாதி |
| ராகு | ஸ்ரீ அழுகணி சித்தர் | திருவாதிரை, சுவாதி |
| | ஸ்ரீ பாம்பாட்டி சித்தர் | சதயம் |
| கேது | ஸ்ரீ சட்டைமுனி சித்தர் | அஸ்வினி, மகம் |
| | ஸ்ரீ குதம்பை சித்தர் | மூலம் |

# உற்சாகத்துடன் உற்சவ மூர்த்தி அமைப்போம்

*கருணாசாகரம் சாந்தம் அருணாசலவாசினம்*
*ஸ்ரீசேஷாத்ரி குரும்வந்தே பிரம்மீபூதம் தரிபாகிதம்''*

பெருமதிப்பிற்குரிய சேஷபக்தர்களே வணக்கம்!

சென்ற இதழில் நம் சித்தர் பீடத்தின் முகப்பு குறித்து (நுழைவு வாயில்) விவரமாக பார்த்திருந்தோம். இப்போது அந்த முகப்பு வேலை 90 விழுக்காடு முடிந்துவிட்டது. குருஜியின் எண்ணப்படி மிக அற்புதமாக அமைந்துள்ளது. மூன்று நான்கு மாதங்களுக்கு முன்னால் சித்தர் பீடத்திற்கு வந்து சென்ற பக்தர்கள் இப்போது வந்து பார்த்தால் மிகவும் வியப்பாகவும், சிறப்பாகவும் இருக்கும். தெய்வ விக்ரஹங்களையும், சித்தர் விக்ரஹங்களையும் முகப்பின் மேலே அமர வைத்து வண்ணம் தீட்டிவிட்டால் முழு வேலையம் பூர்த்தியாகி விடும்.

விக்ரஹங்கள் அனைத்தும் சன்னதிகளில் அமைந்துள்ளது போல் தத்ரூபமாக அமைய வேண்டும் என்பது குருஜியின் அவா. ஆகவே அந்த வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அதுபோல இன்னும் பல வேலைகள் நம் சித்தர் பீடத்தில் நடைபெற்று வருகிறது. அவற்றில் ஒன்று தற்போது பூர்த்தியாகி உள்ளது. அது நாகராஜர், நாகதேவதைகளுக்குண்டான வெள்ளிக்கவசம். மிகச்சிறப்பான முறையில் வெள்ளிக் கவசங்கள் செய்யப்பட்டு குருஜியின் திருக்கரங்களால் சார்த்தப்பட்டுள்ளது.

இப்போது கவசத்தின் சிறப்பினைப் பார்க்கலாம். மனிதர்கள் அணியும் கவசம் அவர்கள் உயிரைக் காக்கும், ஆனால் தெய்வங் களுக்கு சார்த்தப்படும் கவசங்கள் மனித உயிர்களைக் காக்கும். தெய்வ விக்ரஹங்களில் இருந்து வெளிப்படும் அபரிமிதமான சக்தியை வெள்ளிக் கவசங்கள் பிரதிபலித்து அதை நம் மீது பாய்ச்சும் மின்கடத்தி போல் செயல்பட்டு நம் மீது அருள் வெள்ளத்தை பரவச் செய்து, நோய்களை நீக்கி, தீய குணங்களை அழித்து நல்வாழ்வு பெறச் செய்கிறது. ஆகவே அனைவரும் வந்து நாகராஜரை தரிசனம் செய்து அருள் பெற அழைக்கிறோம்.

அதுமட்டுமல்லாது அனைத்து சித்தர் களுக்கும் பஞ்சலோக உற்சவ மூர்த்திகள் செய்து இவற்றை மைலாப்பூர் அறுபத்து மூன்று நாயன்மார் திருவீதி உலா போல் மாடம்பாக்கத்தில் திருவீதி உலா வரச் செய்யவேண்டும் என்பது குருஜியின் நீண்ட நாள் கனவு. அந்த வேலை தற்போது ஆரம்பமாகியுள்ளது. சித்தர் கோயில் கல்ஹாரம் எழுப்ப நிதிஉதவி' செய்யவேண்டும் என நினைத்து அப்போது செய்ய முடியாதவர் களுக்கும் இது ஒரு பொன்னான வாய்ப்பு. அவை கால காலத்திற்கும் நிலை பெற்று மக்கள் மனதில் நீக்கமற நிலைத்திருக்கும். நினைத்துப் பாருங்கள். 18 சித்தர்களின் பஞ்சலோக விக்ரஹங்கள் சித்ரா பௌர்ணமியன்று மாடம்பாக்கத்தில் திருவீதி உலா வரும் காட்சி கண்கொள்ளா காட்சியாக இருக்கும். ஒரு சித்தரின் பஞ்சலோக உற்சவமூர்த்திக்கு நன்கொடை ரூ. **36,000**/- என நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இது ஒரு பெரிய விஷயமல்ல. ஆகவே பக்தர்களே. ஆளுக்கொரு பஞ்சலோக உற்சவமூர்த்தி செய்வதற்குண்டான நன்கொடையை வழங்கலாம். அல்லது இருவர் மூவராகக்கூட அந்த பொறுப்பை ஏற்கலாம். இதற்கு நன்கொடை அளிக்கும் பக்தர்கள் காலங்களைக் கடந்து பஞ்சலோக உற்சவ கலவையில் கரைந்து அழியாது நிலைபெற்று வாழ்வது திண்ணம்.

''கோவில் அமைக்க நன்கொடை அளிப்பது கோடி புண்ணியம்.

கோவில் சிலைகள் அமைக்க நன்கொடை அளிப்பது கோடானு கோடி புண்ணியம்''

உற்சவமூர்த்தி அமைக்க உற்சாகத்தோடு வாருங்கள்.

உள்ளொளி பெருக்கி உயரும் வளத்தோடு செல்லுங்கள்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கிறேன்

அன்புடன்
மருதபரணி

## மஹான் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் ஆராதனை விழா

| | | |
|---|---|---|
| திசம்பர் 19-12- 2019 காலை | | கணபதி ஹோமம், கோ பூஜை<br>அபஸ்மாரஹர தட்சிணாமூர்த்தி ஹோமம் |
| | மாலை | மஹா மிருத்யுஞ்ய ஹோமம் |
| 20-12-2019 | | ஆராதனை, ஸ்ரீ தேவி திருக்கல்யாணம்,<br>சௌபாக்கியலக்ஷ்மி பூஜை, பாதுகை பூஜை,<br>திருவீதி உலா |

நடைபெறவுள்ளது. அனைவரும் கலந்துகொண்டு மஹானின் அருளுக்கு பாத்திரமாக்கும் படி கேட்டுக் கொள்கிறோம்.

ஆராதனை விழா அன்னதானத்திற்கு தேவையான மளிகை பொருட்கள், ஹோமத்திற்கு தேவையான பொருட்களை தாராளமாக தரலாம்.

## சக்தி பீடத்தில்
### முக்கிய தினங்கள்

**அக்டோபர்**

| | |
|---|---|
| 6 | சண்டி ஹோமம் |
| 7 | சரஸ்வதி பூஜை |
| 8 | விஜயதசமி |
| 26 | ஹஸ்தம் |
| 27 | அமாவாசை, தீபாவளி |
| 28 | குருபெயர்ச்சி ஹோமம்<br>மாலை 4.30 முதல் 6.30 மணி வரை |

**நவம்பர்**

| | |
|---|---|
| 2 | கந்த சஷ்டி சூரசம்ஹாரம் |
| 12 | பௌர்ணமி |
| 22 | ஹஸ்தம் |
| 26 | அமாவாசை |

**டிசம்பர்**

| | |
|---|---|
| 11 | பௌர்ணமி, கார்த்திகை தீபம் |
| 19,20 | மஹான் ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் ஆராதனை விழா |
| 25 | அமாவாசை, |
| 26 | ஹனுமத் ஜெயந்தி,<br>சூரிய கிரஹணம் |

18 சித்தர் சக்தி பீடத்திற்கு பஸ் ரூட்
தாம்பரம் வேளச்சேரி வழியாக
ராஜ கீழ்ப்பாக்கம் வந்து தெற்கே
3 கி.மீ. சென்றால் அருள்மிகு தேனுபுரீஸ்வரர்
சிவன் கோயிலுக்கு அருகில்

**ஸ்ரீசக்ர மஹாமேரு**
**ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்**
**18 சித்தர்கள் சக்திபீட**
**பிருந்தாவனம்**
**அமைந்துள்ளது.**

**முகவரி எண். 1, சன்னதி தெரு,**
**மாடம்பாக்கம், சென்னை - 600 126.**
**போன் : 044-22281408, 22280407,**
**8754486723**
**பாலாலயம் : 2228 1337**
**பஸ் ரூட் : தாம்பரத்திலிருந்து 51G, 51K**
**தி.நகரிலிருந்து 5A Cut Service**

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

**அன்பார்ந்த**
**சேஷ ஒளி வாசகர்களே**

மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிரசுரமாகும், சேஷ ஒளியைப் படித்து விட்டீர்களா? உங் களுடைய கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். குறை இருந்தால் திருத்திக் கொள்வோம். நிறை இருந்தால் மகிழ்ச்சி அடை வோம். ஸத்குருவின் அருளை அனுபவித்த அன்பர்கள், தங்களுடைய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் பலரும் அறியும் வண்ணம், சேஷ ஒளியிலும் வெளி யிடுவோம். தங்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன், அனுப்புங்கள்.




அனுப்ப வேண்டிய முகவரி :
பழைய எண். 21/3, புதிய எண். 43, அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி : 04424938734, 24953793, 9445232505

# ராசி பலன்கள்

# அக்டோபர் - டிசம்பர் 2019

## மேஷம்

(அசுவினி, பரணி, கார்த்திகை (முதல் பாதம்)



**அக்டோபர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். நீச்சமடைந்த சுக்கிரனோடு இருக்கிறார். உடல் நலத்தில் கவனம் தேவை. கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்படும். பெண்களுக்கு மாதவிடாய் கோளாறு ஏற்படும் சில அன்பர்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய நேரிடலாம். காதல் தோல்விக்கு இடம் உண்டு. வியாபாரிகள் தொழிலதிபர்கள் நிதானத்தை கடைப்பிடித்தால் நஷ்டத்திலிருந்து தப்பிக்கலாம். மாணவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு மாத இறுதியில் ஓரளவு லாபம் உண்டு. அரசியல்வாதிகள் வீண் வம்புக்கு செல்ல வேண்டாம். கலைஞர்களுக்கு குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பணியாளர்களுக்கு பணவிரையம் உண்டு எச்சரிக்கை! பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 2 முதல் 4 தேதி, 29ம் தேதி முதல் 31ம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை (ராகு காலம்)*

**நவம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். 7ஆம் இடத்தில் சூரிய பகவான் நீச்சம் அடைந்துள்ளார். கணவன் - மனைவி விட்டுகொடுத்து பழகுதல் நலம். சிறு சிறு தடைகளுக்கு பின் திருமணம் நடக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம். சில மாணவர்களுக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. விவசாயிகளுக்கு மகான்களின் தரிசனம் பலன் கொடுக்கும். அரசியல்வாதிகளுக்கு மருத்துவ செலவு ஏற்படும். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் தரும். பணியாளர்களுக்கு சூழ்ச்சி இருப்பதால் சக ஊழியர்களுடன் எச்சரிக்கையாக இருப்பது நலம். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன் கிடைக்கும். சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 27 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, வியாழக்கிழமை.*

**டிசம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபார்வை ராசிக்கு உள்ளது. குரு பலமும் கூடியுள்ளது. தடைபட்ட திருமணம் நடந்தேறும். காதலில் வெற்றி கிடைக்கும். கணவன் மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு எதிர்பாராத திருப்பம் கிடைக்கும். மாணவர்கள் ஆசிரியர்களால் பாராட்டப்படுவார்கள். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகள் ஆன்மீக சுற்றுலா செல்வார்கள். தந்தைவழி சொத்தால் கலைஞர்களுக்கு ஆதாயம் உண்டு. பணியாளர்களுக்கு சுப இடமாற்றம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் திருப்தியான மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 23 முதல் 25 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ மகாபோகர் சித்தர், ஸ்ரீபுலிப்பாணி சித்தர், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, வியாழக்கிழமை.*

## ரிஷபம்

(கார்த்திகை 2, 3, 4, பாதம் ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 பாதம்)



**அக்டோபர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் நீச்சமடைந்துள்ளார். கணவன் - மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். திருமண தடை அகலும். காதல் கைகூடும். வியாபாரிகள் தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். மாணவர்கள் பிரயாணத்தின் போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு மாற்று பதவி கிடைக்கும். சின்னத்திரை கலைஞர்களுக்கு ஆதாயம் உண்டு. பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 2 முதல் 6 தேதி, 31ம் தேதி முதல் நவம்பர் 2ம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீசட்டை முனி சித்தர், ஸ்ரீ குதம்பை சித்தர், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, வியாழக்கிழமை.*

**நவம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். காதல் திருமணம் கைகூடும். ஏற்றுமதி இறக்குமதி கடல் வாணிபம் செய்யும் வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் உண்டு. விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு புதிய தொழில் தொடங்க வாய்ப்பு உண்டு. கலைஞர்களுக்கு கடல் கடந்து செல்ல யோகம் உண்டு. பணியாளர்களுக்கு திடீர் பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும். அஷ்டமசனி இருப்பதால் பிரயாணத்தில் கவனம் தேவை. சந்திராஷ்டம தினங்கள் : 27 முதல் 30 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீகபிலர் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீஆஞ்சநேயர், சனிக்கிழமை.*

**டிசம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 8ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அஷ்டம சனியும் சேர்ந்துள்ளது. வாக்கு லாப ஸ்தானத்தில் ராகு பகவான் உள்ளார். பேச்சில் கவனம் தேவை. கணவன் மனைவி வாக்கு வாதத்தை தவிர்க்கவும். காதல் திருமணம் நடைபெற பரிகாரம் தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பண முடக்கம் ஏற்படும். எச்சரிக்கை! மாணவர்கள் சோம்பேறி தனத்தை தவிர்க்கவேண்டும். விவசாயிகள் கடன் வாங்குவதை தவிர்க்கவும். அரசியல்வாதிகளுக்கு தண்டனை கிடைக்க வாய்ப்பு உண்டு. கலைஞர்கள் உறவினர்களோடு அளவோடு பழக்க வேண்டும். பணியாளர்கள் வாக்குவாதத்தை தவிர்த்தால் பணியை தக்க வைத்து கொள்ளலாம். இந்த மாதம் மிக சாதாரண மாதமாக அமையும். பரிகாரத்தால் சமாளிக்கலாம். சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 27 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை.*

## மிதுனம்

(மிருகசீரிஷம் 3, 4 பாதம் திருவாதிரை, பூனர்பூசம் 1, 2, 3 பாதம்)



**அக்டோபர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். 6ல் குருவும் கண்டக சனியும் உள்ளது. எதிலும் எங்கும் எச்சரிக்கை தேவை. கணவன் மனைவி விட்டுகொடுத்து பழகுதல் நலம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்க்கவும். மாத இறுதியில் மாணவர்களுக்கு நினைத்தது நிறைவேறும். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகளுக்கு கொடுக்கல் வாங்கலில் சிக்கல் ஏற்படும். கலைஞர்களுக்கு திடீர் பணமுடை ஏற்படலாம். பணியாளர்களுக்கு மருத்துவ செலவு உண்டு. பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் ஓரளவு நல்ல பலன் கிடைக்கும். சந்திராஷ்டம தினங்கள் : 6 முதல் 9 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : சூலினி துர்கா, முனீஸ்வரன், வெள்ளிகிழமை.*

**நவம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ராசியில் ராகு பகவானும் 7ல் சந்திரன், சனி, கேது இருப்பதால் வீண் மனகுழப்பங்கள் அதிகரிக்கும். வீண் கற்பனைகள் ஏற்படும். திடீர் பயம் கூட ஏற்படலாம். கணவன் மனைவி விட்டு கொடுத்து பழகுதல் நலம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அகலகால் வைக்கவேண்டாம். மாணவர்களுக்கு திடீர் நல்ல தகவல் வரும். விவசாயிகளுக்கு வாகன யோகம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு எதிர் கட்சிகளால் தொல்லை உண்டு. கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். பணியாளர்கள் உணர்ச்சி வசப்பட்டு முடிவுகளை எடுக்க வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 2 முதல் 5 தேதி, 30ம் தேதி முதல் டிசம்பர் 2ம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : சட்டை முனி சித்தர், குதம்பை சித்தர், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : சித்ரகுப்தர், வியாழக்கிழமை.*

**டிசம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ராஜ யோகம் ஏற்பட்டுள்ளது. திருமணத் தடை நீங்கும் புத்துணர்வு கிடைக்கும். காதல் கைகூடும். கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும். வியாபாரிகளுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் சிறப்பு பட்டம் பெறுவார்கள். விவசாயிகள் கவனமாக இருந்தால் சேமிப்பு கிடைக்கும். வெளிநாட்டு தொடர்பு அரசியல்வாதிகளுக்கு ஆதாயம் தரும். கலைஞர்களுக்கு வெளிநாட்டுடன் இணைந்து செயல்பட வாய்ப்பு கிடைக்கும். பணியாளர்களுக்கு திடீர் பணவரவும் மகிழ்ச்சியும் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சிறந்த மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 27 முதல் 30 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீசட்டை முனி சித்தர், ஸ்ரீகுதம்பை சித்தர், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : சித்ரகுப்தர், வியாழக்கிழமை.*

## கடகம்

(பூனர்பூசம் 4ம் பாதம்,



**அதடோபர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 4ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. காதல் திருமணம் கைகூடும். கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும். மாணவர்களுக்கு நினைத்த காரியம் நிறைவேறும். விவசாயிகளுக்கு அரசாங்க மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகள் கௌரவிக்க படுவார்கள். கலைஞர்களுக்கு உடன் பிறப்பால் தொல்லைகள் உண்டு. பணியாளர்களுக்கு திடீர் இடமாற்றம் உண்டு. வியாபாரிகள் நல்ல லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 9 முதல் 11 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ கபிலர் சித்தர், ஸ்ரீ கருவூரார் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீசக்திபீட கணபதி, சனிக்கிழமை.*

**நவம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு வெளிநாட்டு பிரயாணத்தால் முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகளுக்கு திடீர் பதவி உயர்வு கிடைக்கும். கலைஞர்களுக்கு புதிய சொத்து வாங்கும் யோகம் உண்டு. பணியாளர்களுக்கு மகிழ்ச்சியான சூழல் உண்டாகும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 5 முதல் 7 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ கடுவெளி சித்தர், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ சக்ர மகாமேரு, ஞாயிற்றுக்கிழமை.*

**டிசம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 7ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபகவான் 6ம் இடத்தில் சென்றுள்ளார். உடல் நலத்தில் கவனம் தேவை. திருமண விஷயத்தில் அவசரம் காட்டவேண்டாம். காதலில் நிர்ப்பந்தம் காட்டினால் அவமானம் ஏற்படும். வியாபாரிகள் கடன் வியாபாரத்தை தவிர்க்கவும். மாணவர்கள் சக மாணவர்களின் சூழ்ச்சிக்கு உள்ளாவார்கள். விவசாயிகள் கடன் வாங்குவதை தவிர்க்கவும். அரசியல்வாதிகள் எதிரிகளால் பாதிக்கப் படுவார்கள். கவனம் தேவை. அன்னிய நாட்டு தகவல் கலைஞர்களுக்கு மகிழ்ச்சியை தரும். பணியாளர்கள் அவசர முடிவுகளை எடுக்கவேண்டாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 2 முதல் 5 தேதி, 3ம் தேதி முதல் ஜனவரி 1ம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : முனீஸ்வரன், சனிக்கிழமை.*

**குருஜி கே.வி.எல்.என். சர்மா**

## சிம்மம்



(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)

**அக்டோபர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 2ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பேச்சில் நிதானம் தேவை. உணர்ச்சி வசப்பட்டு அனாவசிய வார்த்தைகளை பேச வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். மாணவர் களுக்கு அபிவிருத்தி ஏற்படும். விவசாயிகளுக்கு குழந்தைகளால் கவலை ஏற்படும். அரசியல்வாதிகள் வீண்வம்புகளில் ஈடுபட வேண்டாம். கலைஞர்களுக்கு புதிய நட்பின் மூலம் உதவி கிடைக்கும். பணியாளர் களுக்கு திடீர் இடமாற்றம் ஏற்படும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும். சந்திராஷ்டம தினங்கள் : 11 முதல் 14 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ நாகராஜர், வெள்ளிக்கிழமை (ராகு காலம்).*

**நவம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 4ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. கணவன மனைவி உறவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் வியாபாரம் பெருகும். மாணவர்கள் வெளிநாட்டுக்கு செல்வார்கள். விவசாயிகளுக்கு குழந்தைகளால் மனக்கசப்பு ஏற்பட்டாலும் சரியாகிவிடும். அரசியல்வாதிகளுக்கு மருத்துவ செலவு ஏற்படும். கலைஞர்கள் பாராட்டு பட்டயம் பெறுவார்கள். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சிறப்பான மாதமாக அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 7 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ மகாபோகர் சித்தர், ஸ்ரீ புலிப்பாணி சித்தர், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீமுருகன், செவ்வாய்கிழமை.*

**டிசம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் நீச்சமடைந்துள்ளார் இருப்பினும் குருபலம் உள்ளது. காதல் திருமணம் கைகூடும். பலவீனமான எண்ணங்களுக்கு இடம் அளிக்க வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு குழந்தைகளால் கவலை ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு அயல்நாட்டு பிரயாணம் உண்டு. சின்னத்திரை கலைஞர்களுக்கு எதிர்பாராத பண உதவி கிடைக்கும். பணியாளர்களுக்கு புதிய வாகன யோகம் உண்டு. பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன் கிடைக்கும். சந்திராஷ்டம தினங்கள் : 5 முதல் 7 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ சட்டைமுனி சித்தர், ஸ்ரீ குதம்பை சித்தர், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ சக்திபீட கணபதி, வியாழக்கிழமை*

## கன்னி



(உத்திரம் 2, 3, 4 பாதம், ஹஸ்தம், சித்திரை 1, 2 பாதம்)

**அக்டோபர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 2ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். 2ஆம் இடத்தில் குருபகவானும் அர்தாஷ்டம சனியும் உள்ளது. எங்கும் எதிலும் நிதானம் தேவை. கணவன் மனைவி விட்டு கொடுத்து பழகுதல் நலம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்க வேண்டும். விவசாயிகளுக்கு வாகன யோகம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு சிறு சிறு சாலை விபத்துகள் ஏற்படலாம். இசைக் கலைஞர்களுக்கு லாபம் உண்டு. பணியாளர்கள் அவசர முடிவை எடுக்க வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 14 முதல் 16 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ கபிலர் சித்தர், ஸ்ரீ கருவூரார் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ சக்திபீட கணபதி, சனிக்கிழமை.*

**நவம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 3ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருவோடு சேர்ந்து இருப்பதால் எதிலும் எங்கும் எச்சரிக்கை தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்கள் பொருளாதாரத்தை திட்டமிடவும். மாணவர்களுக்கு மன அழுத்தம் ஏற்பட்டு நீங்கும். விவசாயிகளுக்கு கடன் தொல்லை அதிகரிக்கும் எச்சரிக்கை! கலைஞர்களுக்கு குடும்பத்தில் அதிர்ச்சி தரும் சம்பவங்கள் நடக்கும். பணியாளர்கள் நிதானத்தை கடைப்பிடிக்கவேண்டும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 10 முதல் 12 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ கடுவெளி சித்தர், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ ராஜ காளியம்மன், ஞாயிற்றுக்கிழமை.*

**டிசம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 2ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருவும் 4ஆம் இடத்தில் உள்ளார். திருமணத் தடை நீங்கும். முதலில் புதிய அத்தியாயம் தொடங்கும். கணவன் மனைவி உறவில் புத்துணர்ச்சி ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நஷ்டத்தை சரிசெய்வார்கள். மாணவர்களுக்கு எதிர்பாராத நல்ல தகவல் வரும். விவசாயிகளுக்கு புதிய சொத்து சேர்க்கை ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு தாய் வழியில் பிரச்சனை உண்டு. கலைஞர்கள் தங்க நகைகளை பத்திரபடுத்தவும். பணியாளர்கள் நிதானத்தை கடைபிடித்தால் வெற்றி கிடைக்கும். சந்திராஷ்டம தினங்கள் : 7 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீசக்திபீட கணபதி, வியாழக்கிழமை.*

## துலாம்



(சித்திரை 3, 4 பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3, பாதம்)

**அக்டோபர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 12ஆம் இடத்தில் நீச்சமடைந் துள்ளார். இருப்பினும் குருபகவான் 2ஆம் வீட்டில் இருப்பது வீசேஷமானது. காதல் திருமணம் கைகூடும். கணவன் மனைவி உறவில் சிறு சிறு சலனம் ஏற்பட்டு விலகும். மனைவியை தவிர மற்ற பெண்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவார்கள். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகள் பெண்ககளால் அவமானப்படுவார்கள். எச்சரிக்கை! கலைஞர்கள் புதிய யுக்தியில் வெற்றி பெறுவார்கள். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதத்தில் சிறு சிறு தொந்தரவு இருந்தாலும் நல்ல மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 16 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : மகாமேரு (லலிதா திரிபுரசுந்தரி) வெள்ளிக்கிழமை.*

**நவம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 2ஆம் இடத்தில் உள்ளார். குரு பலம் கூடியுள்ளது. காதல் திருமணம் கைகூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் லாபம் அடைவார்கள். பட்டம் கிடைக்காமல் தடை ஏற்பட்ட மாணவர்கள் பட்டம் பெறுவார்கள். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகளுக்கு திடீர் பணவரவு உண்டு. கலைஞர்களுக்கு புதிய நட்பின் மூலம் ஆதாயம் கிடைக்கும். பணியாளர் களுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 12 முதல் 15 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ கடுவெளி சித்தர், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : நந்திகேஸ்வரர், ஞாயிற்றுக்கிழமை*

**டிசம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 2ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பேச்சில் கவனம் தேவை. கணவன் மனைவி விட்டு கொடுத்து பழகுதல் நலம். திருமணத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் சிறப்பான லாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு பொருளாதார சிக்கல் ஏற்படும். எச்சரிக்கை! அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் தரும். பணியாளர்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொன்னால் போதுமானது. பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 10 முதல் 12 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை*

## விருச்சிகம்



(விசாகம் 4ம் பாதம், அனுஷம்,கேட்டை )

**அக்டோபர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஜன்மத்தில் குருவும் 2ஆம் இடத்தில் சனி கேதுவும் குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்துவார்கள். சிக்கனம் தேவை. கணவன் மனைவி உறவில் மனகசப்பு ஏற்பட்டு நீங்கும். வியாபாரிகள் தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்த்தால் நஷ்டம் ஏற்படாது. மாணவர்கள் அதிக கவனமாக படிக்கவேண்டும். விவசாயிகள் பண விஷயத்தில் கவனமாக இருக்கவேண்டும். சகோதர சகோதரிகளால் அரசியல்வாதிகளுக்கு பண இழப்பு ஏற்படும். வெள்ளி திரை கலைஞர்களுக்கு லாபம் கிடைக்கும். பணியாளர்கள் திடீர் இடமாற்றம் செய்யப்படுவார்கள். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 18 முதல் 20 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, வியாழக் கிழமை.*

**நவம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாபம் அடைந்துள்ளா. ஏழரை சனியின் பாதிப்பு உண்டு. கணவன் – மனைவி உறவு சிறு சிறு சந்தேகங்களுக்கு பின் சுமுகமாகும். காதல் விஷயத்தில் அவசரம் காட்ட வேண்டாம். தொழிலதி பர்கள், வியாபாரிகள் பண முதலீடுகளை குறைத்து கொள்ளவேண்டும். மாணவர் களுக்கு பிரயாணத்தில் கவனம் வேண்டும். விவசாயிகளுக்கு வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும். அரசியல்வாதிகள் அரசாங்கத்தோடு அனுசரித்தால் சிக்கல் தீரும். கலைஞர் களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். பணியாளர்களுக்கு பொருளாதார சிக்கல் வரும் எச்சரிக்கை! பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 15 முதல் 17 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணா மூர்த்தி, வியாழக்கிழமை.*

**டிசம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் விரையம் பெற்றுள்ளார். இருப்பினும் திருமணம் கூடியுள்ளது. காதல் திருமணம் கைகூடும். கணவன் – மனைவி உறவு சிறப்பாக இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். மாணவர்கள் வீண்செலவை குறைக்க வேண்டும். விவசாயிகளுக்கு புதிய தொழில் தொடங்கும் யோகம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு பொருளாதார சிக்கல் ஏற்படும். அயல்நாட்டிலிருந்து கலைஞர்களுக்கு நல்ல தகவல்கள் வரும். பணியாளர்களுக்கு மனதிற்கு இனிய இடமாற்றம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாக அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 12 முதல் 14 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ சட்டை முனி சித்தர், ஸ்ரீ குதம்பை சித்தர், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ சக்திபீட கணபதி, வியாழக்கிழமை.*

## தனுசு



(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )

**அக்டோபர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் சுபவிரயஸ்தானத்தில் இருக்கிறார். காதல் திருமணம் கைகூடும். கணவன் மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். வீண் கற்பனைகளுக்கு இடமளிக்கவேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் அரசாங்க உதவி கிடைக்கும். விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவிகள் உண்டு. பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 20 முதல் 23 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ கபிலர் சித்தர், ஸ்ரீ கருவூரார் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை.*

**நவம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் சுபவிரயஸ்தானத்தில் உள்ளார். காதல் திருமணம் கைகூடும். நீண்ட நாள் தடைபட்ட விஷயங்கள் அனுகூலமாகும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். மாணவர்களுக்கு எதிர்பாராத நல்ல தகவல் வரும். விவசாயிகளுக்கு கடன் தொல்லை தீரும். அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். கலைஞர்களுக்கு உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும். பணியாளர்களுக்கு திடீர் பணவரவு உண்டு. ஏழரை சனி இருப்பதால் பிரயாணத்தின்போது கவனம் தேவை. சந்திராஷ்டம தினங்கள் : 17 முதல் 19 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ கடுவெளி சித்தர், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீமுனீஸ்வரன், ஞாயிறு.*

**டிசம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் ஆட்சியடைந்துள்ளார். குருஜென்ம ராசியில் இருப்பதால் மனபுழுக்கம் ஏற்பட்டு விலகும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் சீரான லாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் அலட்சியம் வேண்டாம். விவசாயிகளுக்கு பொருளாதார சிக்கல் உண்டு. அரசியல்வாதிகள் சூதாட்டம், பங்கு மார்க்கெட்டை குறைத்தால் நஷ்டம் குறையும். கலைஞர்களுக்கு குடும்பத்தில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பணியாளர்கள் பொருளாதாரத்தை திட்டமிட்டால் சமாளிக்கலாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாக இருக்கும். சந்திராஷ்டம தினங்கள் : 14 முதல் 16 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ கபிலர் சித்தர், ஸ்ரீ கருவூரார் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை.*

## மகரம்



(உத்திராடம் 2, 3, 4 பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்)

**அக்டோபர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 12ஆம் இடத்தில் உள்ளார். ஏழரை சனியின் பாதிப்பு உண்டு. கணவன் மனைவி உறவில் மற்றவர்களின் ஊடுருவலால் தொல்லை ஏற்படும். எச்சரிக்கை! கேட்பார் பேச்சை கேட்க வேண்டாம். மூளைசலவை செய்ய முயற்சிப்பவர்களை முறியடிக்க வேண்டும். காதல் திருமணம் கைகூடும். உடல் நலத்தில் அதிக கவனம் வேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். மாணவர்கள் உல்லாச சுற்றுலா செல்வார்கள். விவசாயிகளுக்கு புதிய வாகன யோகம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு ஆளுமை திறன் கூடும். சின்னத்திரையில் விளம்பரம் செய்யும் கலைஞர்கள் லாபம் அடைவார்கள். பணியாளர்களுக்கு மனதிற்கு இனிய சம்பவம் நடக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 22 முதல் 25 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ ஆஞ்சநேயர், சனிக்கிழமை.*

**நவம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 12 ஆம் இடத்தில் உள்ளார். ஏழரை சனியின் ஆதிக்கம் உள்ளது. உடல்நலத்தில் சிறு சிறு பாதிப்பு ஏற்பட்டு விலகும். தியானம் மன அமைதியை கொடுக்கும். திருமண தடை நீங்கும். காதல் மிளிரும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு அரசாங்க ஆதரவு கிடைக்கும். கலைஞர்கள் புதிய யுக்தியில் பயன் அடைவார்கள். பணியாளர் களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். சில அன்பர் களுக்கு வெளிநாட்டு பிரயாண வாய்ப்பு உண்டு. இந்த மாதம் நல்ல மாதமாக அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 19 முதல் 21 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ கடுவெளி சித்தர், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீராஜகாளியம்மன், ஞாயிற்றுக்கிழமை, ராகு காலம்.*

**டிசம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 12ஆம் இடத்தில் உள்ளார். கூட்டு கிரகச் சேர்க்கை ஏற்பட்டுள்ளது. ஏழரை சனியின் பாதிப்பு உண்டு. கணவன் மனைவி உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். காதல் திருமணம் கைகூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் முன்னேற்றம் காண்பார்கள். மாணவர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் உண்டு. விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். வெளிநாட்டு திடீர் தகவல் அரசியல்வாதிகளுக்கு ஆதாயம் தரும். கலைஞர்களுக்கு புதிய திருப்பம் உண்டு. பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாக அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 16 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ கபிலர் சித்தர், ஸ்ரீ கருவூரார் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீஐயப்பன், சனிக்கிழமை.*

## கும்பம்



(அவிட்டம் 3,4, பாதம், சதயம் பூரட்டாதி 1,2,3 பாதம்

**அக்டோபர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 11ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். 10ல் குருபகவான் இருப்பதால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எதிலும் எங்கும் நிதானம் தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்கள் அகலக்கால் வைக்க வேண்டாம். மாணவர்கள் ஆசிரியர்களால் தண்டிக்கப்பட இடமுண்டு. விவசாயிகள் கௌரவிக்கபடுவார்கள். கணவன் மனைவி உறவு சாதாரணமாக இருக்கும். அரசியல்வாதிகளுக்கு திடீர் பயணத்தால் ஆதாயம் கிடைக்கும். கலைஞர்களுக்கு மருத்துவ செலவு ஏற்படும். பணியாளர்கள் இடமாற்றத்திற்கு முயற்சி செய்ய வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும். சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 27 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

*அ.எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை.*

**நவம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ராஜயோகம் ஏற்பட்டு இருப்பதால் பணவரவு திருப்திகரமாக இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் திட்டமிட்டால் அதிக லாபம் பெறலாம். மாணவர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் அனுகூலம் தரும். விவசாயிகளுக்கு வங்கிகளால் சிறுசிறு தொல்லை ஏற்படும். அரசியல்வாதிகள் பதவியை தக்க வைத்து கொள்ளவேண்டும். கலைஞர்களுக்கு கடல் பிரயாணம் ஆதாயம் தரும். பணியாளர்களுக்கு குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.

*அ.எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ கடுவெளி சித்தர், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை*

**டிசம்பர்**

ராசிநாதன் 4ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. காதல் திருமணம் கைகூடும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகள் அரசாங்கத்தால் பலன் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. கலைஞர்களுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். பணியாளர்களுக்கு நல்ல இடமாற்றம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை..*

## மீனம்



(புரட்டாதி 4ம்பாதம் உத்திரட்டாதி, ரேவதி)

**அக்டோபர்**

மாத ஆரம்பத்தில் மாத ஆரம்பத்தில் ராசிநாதன் பாக்கியம் அடைந்துள்ளார். கணவன் மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். திருமண தடை அகலும். காதலில் வெற்றி கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். மாணவர்கள் ஆசிரியர்களால் பாராட்டப்படுவார்கள். விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் கிடைக்கும். அரசியல்வாதிகள் ஆன்மிக பயணம் மேற்கொள்வார்கள். கலைஞர்களுக்கு புதிய தொழில் நுட்பத்தால் வாய்ப்புகள் கூடும். பணியாளர்களுக்கு எதிர்பாராத பணவரவு உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை.*

**நவம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். திருமண தடை நீங்கும். காதல் கைகூடும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு மனதிற்கு இனிய சம்பவம் நடக்கும். விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு பூர்வீக சொத்துகள் கிடைக்கும். கலைஞர்களுக்கு வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல்கள் வரும். பணியாளர்களுக்கு பாராட்டுக்கள் குவியும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், ஞாயிற்றுக்கிழமை (ராகு காலம்)*

**திசம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். கணவன் மனைவி எச்சரிக்கையோடு பழகவேண்டும். திருமணத்தில் சிறு சிறு சலனங்கள் ஏற்படலாம். காதல் கைகூடும். பரிகாரம் தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்கள் பொருளாதாரத்தை திட்டமிட்டால் நஷ்டத்திலிருந்து தப்பிக்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் வெற்றி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு திடீர் பதவி இறக்கம் உண்டு. கலைஞர்களுக்கு புதிய நட்பின்மூலம் ஆதாயம் உண்டு. பணியாளர்கள் இடமாற்ற முயற்சியை கைவிட வேண்டும். பொதுவாக இந்த மாத முற்பகுதியில் ஓரளவு நல்ல லாபமாகவே அமையும்.

*அ.எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை.*

ஜெய ஜெய ஸத்குருஸ்ரீ சேஷாத்ரி ஸத்குரு

## திண்ணையில் ஸத்குரு



குருசேவையில் தன்னைத்தானே தன்னலமின்றி அர்ப்பணித்துக் கொண்டுள்ள ஓர் உன்னத ஆத்மா திரு. ராமஸ்வாமி மாமா அவர்கள். 1994ஆம் ஆண்டு மாடம்பாக்கத்தில் பாலாலயம் அமைந்த காலத்திலிருந்து சக்திபீட பிருந்தாவனம் இரண்டு குடமுழுக்கு விழாக்கள் காண்பதற்கும், அதன் பரிணாம வளர்ச்சிக்கும், தனது மெல்லிய ஆனால் உறுதியான தோள் கொடுத்தவர். இவர் ஓய்வு பெற்ற கட்டிட பொறியாளர் ஆவார். தற்சமயம் தளராத வயதிலும், ஆலயத்திற்கு வாரத்திற்கு ஒருமுறையாவது வந்து மற்றும் விழாக்களில் கலந்துகொண்டு, மன நிறைவு கொள்கிறார். அவரைப் பொறுத்தவரை மாடம்பாக்கமே திருத்தலம்.

ஸத்குரு அவரை ஆட்கொண்டதிலிருந்து அவருக்கு பல அனுபவங்கள். மிக முக்கியமாக, என்றும் நிரந்தரமாக இருக்கக்கூடிய அனுபவத்தை அவர் மிகவும் நெகிழ்ந்து கூற, இங்கு பகிர்ந்து கொள்கிறோம்.

சுமார் 15-16 ஆண்டுகளுக்கு முன், ஒரு அமாவாசை நன்னாளில் ஸத்குருநாதர், திரு. ராமஸ்வாமி மாமாவிற்கு குருஜி மூலமாக சூட்சுமப் பிரவேசத்தில், அவரது வீட்டில் தாம் (ஸத்குரு) அமர்வதற்கேற்ப, ஒரு திண்ணையை அமைக்குமாறு அருள்வாக்கு மலர்ந்தருளினார். திரு. ராமஸ்வாமி மாமா அவர்களும் அந்த அருட்கட்டளையை உடனே நிறைவேற்றினார். சில நாட்களுக்குப் பிறகு அவருக்கு ஒரு பெரியவர் திண்ணை மேல் அமர்ந்திருக்கும் காட்சியும் கிடைத்தது.

ஒரு முறை அவர் ஸத்குருவின் உத்திரவு பெற்று வெளியூர் செல்ல, சூட்சுமப் பிரவேசத்தில், தாம் அவர் வீட்டின் திண்ணை மேல் அமர்ந்து கொண்டு வீட்டை பாதுகாத்ததாகவும் குருநாதர் மிகக் கனிவுடன் கூறினார். என்னே பரப்பிரம்மத்தின் கருணை! இந்த செய்தி கிடைத்தவுடன் திரு. ராமஸ்வாமி மாமா பரமானந்தம் அடைந்தார். தன்னலமின்றி குருசேவையில் ஈடுபட்டால், ஸத்குருநாதரின் தாயன்புடன் கூடிய அரவணைப்பு கிட்டும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

திண்ணை கட்டியதிலிருந்து, திரு. ராமஸ்வாமி மாமா திண்ணை மேல் ஒரு தீபத்தை ஏற்றி வைத்து ஸத்குருவை ஆராதித்து வருகிறார். அவர் வார்த்தைகளில் "ஸத்குருவின் பாதங்களுக்கு நம்மை அர்ப்பணித்துக் கொண்டு, நம்பிக்கையுடன் குருநாதரைப் பிரார்த்தனை செய்து கொண்டு எந்த வேலையை எடுத்துக் கொண்டாலும் அது நல்லதாகவே நடக்கும். திரும்ப திரும்ப நான் சொல்வது குருநாதரிடம் நம்பிக்கை வைக்க வேண்டும் என்பது. இது என் வாழ்க்கையில் நடந்து கொண்டிருக்கின்றது. எனது வீட்டின் முன் திண்ணையில் அமர்ந்து கொண்டு எனக்கு எல்லா நன்மைகளையும் ஆசீர்வதித்துக் கொண்டிருக்கின்றார்."

குருசேவையின் மகத்துவத்திற்கு "திண்ணையில் ஸத்குரு" ஒரு நிதர்சனம்.

- திரு. இராமசாமி அவர்கள்,
மாடம்பாக்கம்

## அறக்கட்டளையின் இதர சமூக நற்பணிகள்

**நித்திய அன்னதானம் :**

பிறந்த நாள், திருமண நாள், அறுபதாம் கல்யாண நாள், நீத்தார் நினைவு நாள் ஆகிய தினங்களில் அன்னதானம் செய்து பலன் அடையுங்கள். வடை பாயசத்துடன் ஒரு நாளைக்கு அன்னதானம் ரூ. 2750/- நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு 80G உண்டு.

தானத்தில் சிறந்தது அன்னதானம்
அன்னதானம் செய்வோம்
ஆனந்தம் அடைவோம்

**இலவச மருத்துவமனை**

பொருளாகவோ, மருந்துகளாகவோ நன் கொடை அளித்து நோயற்ற வாழ்வு பெறுங்கள்!



ஸ்ருஷ்டி கணபதி ஹோமத்தில் பூர்ணாஹுதி காட்சி

## அபிராமி அந்தாதி விளக்கவுரை

சென்ற சேஷ ஒளிச்சுடரில், அபிராமி அந்தாதியின் அளப்பரிய பெருமைகளையும் அதனை இயற்றிய 'அபிராமி பட்டரின்' அற்புதங்களையும், அனுபவித்து, கணபதி காப்போடு துவங்கி அதன் விளக்கத்தையும் கண்டோம். இச்சேஷ ஒளியில், 'அபிராமி அந்தாதியின்' 1,2,3 பாடல்களையும், அதன் விளக்க உரைகளையும் காண்போம்.

**முதல் பாடல்**

"உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம்போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக் குங்கும தோயம் என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழுத்துணையே"

**விளக்கம் :**

அன்னை அபிராமியின் நெற்றியில் விளங்கும் திலகமானது, உதிக்கின்ற செங்கதிரைப் போன்று பொன்மயமாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. சான்றோர்களுடைய உள்ளத்தில் பொக்கிஷமான மாணிக்கமாக அவள் மிளிர்கின்றாள். மாதுளை மொட்டின் நிறம் கொண்ட கமலம் என்ற தாமரை மலரில் வீற்றிருந்து, செல்வத்தை அள்ளித்தரும் திருமகளால் போற்றப்படும், மின்னல் கொடியினை போன்றவள் என் அன்னை அபிராமி. அவள், மெல்லிய மணம் கமழும் குங்குமம் கரைந்த நீரைப் போன்ற திருமேனி கொண்டவள். அத்தாயே ஒவ்வொரு நொடியும், விழித்துணையாக இருந்து எனக்கு வழிகாட்டுகின்றாள்.

**இரண்டாம் பாடல்**

"துணையும், தொழுந்தெய்வமும், பெற்ற தாயும், சுருதிகளின்
பனையும், கொழுந்தும், பதி கொண்ட வேரும்பனி மலர்ப்பூங்
கணையும், கரும்புச்சிலையும், மென் பாசாங்குசமும், கையில்
அணையும் திரபுரசுந்தரி ஆவது அறிந்தனமே"

**விளக்கம் :**

என் வாழ்வின் இன்ப துன்பங்களில் எனக்கு துணையாக, நான் மனமுருகி தொழும் தெய்வமாக, என்னை பெற்றெடுத்த தாயாக, உலகத்தின் ஆதாரமான வேதங்களுடைய கிளைகளாக, அவற்றின் தளிர் இலைகளாக, இப்புவியில் அவ்வேதங்கள் நிலைப்பெற்று விளங்குவதற்கு வேராகவும் விளங்கி, குளிர்ந்த பனிமலர் கணையையும், இனிக்கும் கரும்பை வில்லாகவும் கொண்டு, மெல்லிய பாசத்தையும், அங்குசத்தையும் கையில் ஏந்தியிருக்கும் அன்னை அபிராமியே, திரிபுரசுந்தரி தெய்வம் என்பதை நான் தெரிந்து கொண்டேன்.

**மூன்றாவது பாடல்**

"அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன், உனது திருவடிக்கே; திருவே! வெருவில்
பிறிந்தேன், நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழுநரகுக்கு உறவாய மனிதரையே"

**விளக்கவுரை**

உன்னருள் பெற்ற உன்னத அடியவர்களின் அருமைகளை உணராமல், தீய செயல்கள் புரிந்து, நரகத்தில் விழக் காத்திருக்கும் நரர்களை வெறுத்து நான் விலகி வந்துவிட்டேன். மானிடர்களால் சட்டென்று உணர இயலாத உன் அருளே உண்மை மெய்பொருள் என்பதை நான் அறிந்து கொண்டேன். அதனால் உனது திருவடிகளே சரணம் என நான் சரணடைந்தேன் என் திருவே, தாயே, தெய்வமே!

(தொடரும்)

- திருமதி உமாபரணி

ஜய ஜய சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி சத்குரு!

# அருள் வருவது உண்மையா?

இந்த கேள்வியைக் கேட்டு விட்டு அதற்கான பதிலை சொல்லச் சொன்னவர் ஸ்ரீ குருஜி அவர்கள். முயற்சியில் ஈடுபட்டுள்ளேன், மகானின் கருணையோடு அருள் என்னும் வார்த்தை கடவுளோடு மட்டுமே தொடர்புடையது ''அருள்ஜோதி தெய்வம்'', ''அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லையாங்கு'' போன்ற பெரியோரின் வாக்குகளிலிருந்து அறியலாம். அருள் என்றால் கடவுளின் ஆசீர்வாதம் அல்லது கருணை என்று கொள்ளலாம். மனிதனுக்கு இறைவனின் அருள் எல்லா காலத்திலும் தேவைப்படுகிறது. நாம் பிறவி எடுத்து வந்ததுமே, தெரிந்துவிடுகிறது, ஏதோ காரணத்தால் ஜனித்து விட்டோமென்று கிடைத்தற்கரியது, மனித பிறவி. அதிலும் அரிது ஊனமில்லா உடல், அதனினும் அறிது கூர்மையான அறிவுடன் பிறப்பது. இப்படிப்பட்ட பிறவி எடுத்து அதை வீணாக்காமல் வாழ்வதே நம் நோக்கமாக இருக்க வேண்டும். ஒரு மனிதனின் வாழ்வில் இன்பம், துன்பம் இரண்டும் மாறி மாறி வருவது இயற்கை உலக நியதி. ஆனால் இவற்றை கடந்து நாம் வாழும் வாழ்க்கைதான் நம்மை வானுறையும் தெய்வத்துள் வைக்கும்.

நம் முன்னோர்கள் தெய்வத்தோடு இயங்க வாழ்க்கை வாழ்ந்தார்கள். வாழ்க்கை வேறு தெய்வம் வேறு என்று அவர்கள் வாழவில்லை. பக்தி என்பது தினசரி வாழ்க்கையோடு இழையோடி இருந்தது. அது ஆடம்பரமாக வெளிப்படவில்லை. எல்லாவற்றையும் தெய்வமாக பார்த்தார்கள். மரம், செடி, கொடி, பறவை, மீன், ஆறு, கடல், மலை, பாறை, சூரியன், சந்திரன் என்று இயற்கையே தெய்வமானது. பிற்காலத்தில் அவர்கள் கற்பனையின் வடிவமே இயற்கைக்கு உருவம் கிடைத்தது. அந்த உருவங்களுக்கு ஆலயங்கள் வந்தன. கடவுளர்களுக்குப் பெயர்களும் சூட்டப்பட்டது. நாம ரூபங்கள் உண்டாயின.

இப்படிப்பட்ட கடவுளர்களுக்காக வாழ்ந்தவர்கள் ரிஷிகளாகவும், சித்தர்களாகவும், மகான்களாகவும், ஞானிகளாகவும் ஆயினர். கோடிக்கணக்கான மகான்களும், ஞானிகளும் வாழ்ந்த பூமி நம் பாரத புண்ணிய பூமி, இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். மனிதனை நல் வழிப்படுத்துவதே அவர்கள் வேலையாக இருக்கிறது.

ஒரு மனிதன் தன் வாழ்நாள் முழுவதும், இறைவன் வழிபாட்டிலும், இறை சிந்தனையிலும் இருக்கும்போது அவன் அந்த தெய்வ குணங்களைப் பெற்று உயர்ந்த நிலைக்குப் போய்விடுகிறான். ராமகிருஷ்ண பரஹம்சர் காளி உபாசனை செய்து, காளியோடு சதா பேசக் கொண்டிருப்பாராம். அவரை காளியின் சொரூபமாகவே நிறைய பேர் பார்த்திருக்கிறார்கள். ஷீரடி பாபா சிலருக்கு முகமதாகவும், சிலருக்கு சிவபெருமானாகவும் காட்சி கொடுத்தார். இதேபோல் நம் மகான் சேஷாத்ரி, ரமணர், இன்னும் பல சித்தர்களையும் சொல்லலாம். இவர்கள் எல்லோருமே கடவுளின் பரிபூரணமான அருள் பெற்றவர்கள். அல்லது கடவுளின் மறு அவதாரங்களே. சில மகான்கள் தங்களின் அருளை, உபதேசங்களாக சொன்னார்கள். சிலர் மௌனமாக இருந்துவிட்டார்கள். எப்படி இருந்தாலும் அவர்களை ஒருமுறை பார்த்தாலே போதும். அவர்களுடைய அந்த கருணைப் ப்ரவாகம் நம்மை ஆட்கொண்டு விடும்.

பாண்டிச்சேரி புனித அன்னையிடம் ஒருவர் கேட்டாராம். ''ஒரு மனிதனுக்குள் தெய்வ சக்தி வருவது உண்மையா? என்று. அதற்கு அன்னை:- ஒரு மனிதன் ஒருபோதும் இறை சக்தியை கீழே இறக்க முயற்சிக்க கூடாது. நீ செய்யவேண்டியது எல்லாம் ஒன்றுதான். மனம், சித்தம் இரண்டையும் சுத்தமாக ஆக்கி உன்னை ஒரு காலி பாத்திரமா வைத்துக் கொள். இறையருள் தானே உனக்குள் இறங்கி, நிரப்பிவிடும் நீ கட்டாயமாக அதை இழுக்கப் பார்த்தால் ஆபத்தில் கொண்டுவிடும் என்று கூறினாராம். எவ்வளவு உண்மையான வார்த்தைகள்!

சிலர் சில சக்திகளை பெறவும், சித்துகளைப் பெறவும் உபாசனா தெய்வங்களின் உதவியை நாடி, கடுமையான பூஜைகள், யாகங்கள் செய்து, அந்த சக்தியை பெற்று விடுகிறார்கள். பிறகு கிடைத்த சக்தியை சரியான முறையில் நிர்வகிக்க முடியாமல், தவறான வழியில்போய் அதலபாதாளத்தில் தள்ளப்படுகிறார்கள். இதற்கு நான் உதாரணம் சொல்லத் தேவையேயில்லை!

மனது சுத்தத்தோடும், திட பக்தியோடும், வைராக்கியத்தோடும் கடவுளை கடவுளுக்காக மட்டுமே பூஜிப்பவர்கள் கண்டிப்பாக ''அருள்'' பெற்றவர்கள். அவர்கள் தங்களை ஒரு காலி பாத்திரமாக வைத்து, அதில் நிரம்பி வழியும் தெய்வ அருளை, உலக நன்மைக்காகவும், தன்னை தேடிவரும் பக்தர்களின் கஷ்டங்களை நிவர்த்திக்கவுமே, வாழ்கிறவர்கள். அவர்கள் வெறும் கருவியாக செயல்படுவார்கள் அவர்களிடம் வேஷம் கிடையாது. சித்து விளையாட்டு என்ற பெயரில், கண்கட்டுவித்தை இல்லை. இதை நாம் நன்றாக புரிந்து செயல்பட வேண்டும்.

சில அருள் வாக்கு சொல்லும் இடங்களில், நம்மை பயமுறுத்தியும், நம்முடைய பலவீனங்களை காட்டி, நம்மை செயலிழக்க செய்தும் விடுவார்கள். அவர்களிடம் இருக்கும் ஏதோ ஒரு மந்திர சக்தியால் நாம் அவர்களுக்கு அடிமையாகி, நம்முடைய சுயசிந்தனை, பணம், எல்லாவற்றையும் இழுக்கும் அபாயம் உள்ளது.

இந்த மாதிரியான ஒரு போலி அருள் வாக்கு சொல்பவரிடம் ஏமாந்தவர்கள் நாங்கள். பிறகு ஸ்ரீமான் குருஜி அவர்களைப் பற்றி தெரிந்து அவர் உதவியை நாடினோம்.

முதல்முறை பார்த்ததுமே, எங்கள் நிலைமையை நன்றாக தெளிவாக புரிய வைத்தார். வேஷம் போடும் ஆன்மீகவாதிகளை புரிந்து கொள்வது எப்படி என்று விவரித்தார். தக்க சமயம் பார்த்து அந்த போலி சாமியாரின் பிடியிலிருந்து வெளியேறினோம். இன்று மன நிம்மதியோடும், பயமில்லாமலும், தெளிவாகவும் வாழ்கிறோம். குருஜிக்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

அருள் வருவது உண்மையா?
எங்கு சத்தியம் இருக்கிறதோ
அங்கு வரும் அருள் உண்மை!
எங்கு தர்மம் காக்கப்படுகிறதோ
அங்கு வரும் அருள் உண்மை!
எங்கு மனிதரில் பாரபட்சம் இல்லையோ!
அங்கு வரும் அருள் உண்மை!
எங்கு தன்னலம் ஒருபோதும் இல்லையோ
அங்கு வரும் அருள் உண்மை!


இதுதான் நாங்கள் கற்றுக் கொண்ட பாடம் மாடம்பாக்கம் வாருங்கள்! மகானின் அருளைப் பெறுங்கள்! நிம்மதியாக வாழுங்கள்!

நன்றி!

**மயிலை மலர் அரசி**

**பதினெண் சித்தர் சக்திபீட பிருந்தாவனம் நுழைவு வாயில்**

**நிதிதனை அள்ளி தாருங்கள்! நிம்மதி பெற்று செல்லுங்கள்!**




நுழைவாயில் அமைக்கும் இறைபணி முடிக்கும் தருவாயில் உள்ளது. பெயிண்ட் வேலை பாக்கியுள்ளது. பெயிண்ட் வேலை செய்ய ரூ. 1 இலட்சம் தேவைப்படுகிறது.

நன்கொடை செய்து சித்தர்களின் அருளாசிகளை பெறுங்கள்.

காசோலை அனுப்பும் பெயர்

**ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் பிருந்தாவனம் டிரஸ்ட்**

வங்கி : ஆந்திரா பேங்க், **159010100069912**

**IFS Code : ANDB0001590,**

**Madambakkam, Chennai-126.**

SRI SESHA OLI - R.Dis . No. 795/2006

ஸ்ரீ சக்திபீட கணபதி துணை ஸ்ரீ ஸத்குரு துணை

# ஸத்குருவும் நானும்

## (2) ஸத்குரு உணர்த்துகிறார்

1995 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற ஸத்குருவின் மஹா ஆராதனை விழாவில் கலந்து கொண்டது. எனது வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியது. கனவா அல்லது நனவா என்கிற பிரமிப்பு என்னுள் தோன்றியது. இந்த நிலை பல நாட்கள் நீடித்தது.

1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடந்த ஸத்குருவின் மஹா ஜெயந்தி விழாவில் கலந்து கொண்டது, இந்த ஆனந்த அனுபவம் கனவல்ல, நனவே என்கிற நிலைமையை ஸத்குருவின் அருளால் உணர்ந்தேன். ஸ்ரீ கிருஷ்ணனைப் பிரார்த்தனை செய்து, ஜெயந்தி விழா ஏற்பாடுகளை செய்யுமாறு, ஸத்குருநாதர் உத்திரவிட, சேஷ குடும்பம் செயலில் இறங்கியது. நான் அப்பொழுது போரூரில் தங்கியிருந்தேன். ஜெயந்தி விழாவிற்கு சுமார் 15 நாட்கள் முன்னர், பேருந்தில் ஜன்னல் ஓர் இருக்கையில் அமர்ந்து கொண்டு அலுவலகம் செல்லும் பொழுது, இரண்டு லாரிகள் ஒன்றின் பின் ஒன்றாக எதிர்ப்பக்கம் செல்லக் கண்டேன். என்ன அதிசயம்! முதலாவது லாரி ஸ்ரீகிருஷ்ணா என்கிற பெயரிலும், இரண்டாவது ஸ்ரீ ஜெயந்தி என்கிற பெயரிலும், கடந்து சென்றன. ஸத்குரு உணர்த்தினார். ''நான் இருக்கிறேன், முன்கால் வைத்து செயல்படு'' என. உற்சாகத்துடன் ஸத்குருவின் மஹிமையை எனக்குத் தெரிந்தவர்கள் பலரிடம் எடுத்துரைத்தேன். ஜெயந்தி விழா நடத்துவதற்கு பொருளுதவி கிடைக்க ஒரு சிறு கருவியானேன். குருஜி ஸத்குரு சேவையின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கி, சில வாய்ப்புகள் அளிக்க ஸத்குருவின் உணர்த்துதல் தொடர்ந்தது.

ஸத்குருவின் பேரருளில், அறங்காவலர் திருமதி உமாபரணி அவர்கள் மிக அருமையாக இயற்றிய குருவை ஆராதிக்கும் ''போற்றி'' வெகுவிரைவில் மனப்பாடமாக அமைந்தது. அதுவே தாரக மந்திரமாக இருந்து, ஒரு நேரடித் தொடர்பை ஏற்படுத்தியது.

நிகழ்வுகள் பல. வாழ்க்கையிலும் சரி, ஸத்குரு சேவையிலும் சரி, ஸத்குரு கூடவே இருக்கிறார், உணர்த்துகிறார், புரிய வைக்கிறார் என்பதை தெளிவுபடுத்தின. உதாரணமாக, ஸத்குரு சூட்சுமப் பிரவேசத்தில் கேட்ட சில அருமையான வினாக்கள்:

''ஒன்றும் ஒன்றும் ஒன்றாகுமா?''

''நான் உன்னிடம் இருக்கிறேனா? நீ என்னிடம் இருக்கிறாயா?''

''அடக்கணுமா, அடங்கணுமா?''

இவை வினாக்கள் அல்ல. அற்புதமான ஞான முத்துக்கள். வழி காட்டும் அருட் சொற்கள்.

குருஜியிடம் விளக்கம் விழைய, அவரும் மிக வாஞ்சையுடன் ஸ்ரீமத் பாகவத புராணம் படிக்குமாறு அறிவுறுத்தினார். மூன்றே வினாக்களில் ஸத்குருநாதர் ஸ்ரீமத் பாகவதத்தின் சாராம்சத்தை தெளிவாக்கினார். அதுவும் என் போன்ற பாமரனுக்கு.

இன்னொரு நிகழ்வு 2010 ஆம் ஆண்டில் நான் துபாயில் இருக்கும் பொழுது, அக்டோபர் மாதம் என நினைக்கிறேன். ஒரு நாள் இரவு ஸத்குருவின் முன் உட்கார்ந்து கொண்டு, எனது தனிமையை எண்ணி, சற்று கண் கலங்கினேன். இரண்டு நாட்கள் கழித்து சூட்சுமப் பிரவேசத்தில் தாம் கூடவே இருக்கும் பொழுது என்னக் கண் கலங்க வேண்டாமென அருள் வாக்கு மலர்ந்ததாக எனக்கு செய்தி கிடைத்தது. கண் கலங்கியதை யாருக்கும் கூறவில்லையே எவ்வாறு குறிப்பறிந்து ஸத்குருநாதர் தாம் கூடவே இருக்கிறோம் என்பதை உணர வைத்தார் என இன்னும் பிரமிப்பில் ஆழ்ந்துள்ளேன்.

ஸத்குரு உணர்த்துவது மட்டுமில்லாமல், எனது இல்லற வாழ்க்கையிலும், குருசேவைப் பாதையிலும் அற்புதங்கள் பல நடத்தியுள்ளார். உயர்வுகள் பல தந்துள்ளார். அடுத்த அத்தியாயங்களில் சில வற்றை சொல்ல உள்ளேன்.

தொடரும்..

முரளி சுந்தரம்



விநாயகர் சதுர்த்தியன்று ஊர்வலம்


**ஸ்ரீ சேஷ ஒளி**

திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர்
குருஜி கே.வி.எல்.என். சர்மா

வெளியீட்டாளர்
திரு. கே. ராமசுப்ரமணியன்

உதவி ஆசிரியர்
திருமதி. என். ஜானகி

கௌரவ ஆசிரியர்கள்
திரு. மருதபரணி
திருமதி. உமாபரணி

வடிவமைப்பு
திருமதி. பிரேமா

பதிவு அலுவலகம்
ப.எண். 21/3, பு.எண். 43,
அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை – 600 004.
போன் : 04424938734, 24953793
இணைய தளம் : www.seshadri.info
Email: guruji@seshadri.info


## டிரஸ்டின் வெளியீடுகள்

1. ஸ்ரீசக்ர மகாமேரு 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவன ஸ்தல வரலாறு (தமிழ், ஆங்கிலம்)
2. மகான் திருவுருவம் பதித்த சிறிய, பெரிய படங்கள்
3. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் பூஜை முறைகள்
4. ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மகாத்மியம் (தமிழ், ஆங்கிலம்)
5. The Glory of Sakthi Peetam
6. ஸ்ரீ கிரஹலட்சுமி (வாஸ்து தோஷம் போக்கும் படம்)
7. ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் (அபூர்வ படம்)
8. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸத்குரு பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
9. ஸ்ரீ சக்ர மஹாமேரு அம்பிகை பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
10. ஸத்குருவும் சக்தி பீடத்தின் மஹிமையும்


## ஸ்ரீ சேஷ ஒளி

விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| முழு பக்கம் | ரூ. 5,000 | (கறுப்பு/வெள்ளை) |
| 1/2 பக்கம் | ரூ. 2,500 | (கறுப்பு/வெள்ளை) |
| 1/4 பக்கம் | ரூ. 1,250 | (கறுப்பு/வெள்ளை) |
| இரு பத்தி | ரூ. 500 | |
| ஒரு பத்தி | ரூ. 250 | |


Publisher Mr. K. RAMASUBRAMANIAM from New No. 43, Alamelumangapuram, Mylapore, Chennai - 600 004
and Printed by him at Icon Graphics, Chennai-5.